# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE
## NAGAPATTINAM.

**S.C. 30/2019** P.W. 7

Deposition of witness for Prosecution:

Name : திரு. வீரமணி Father's Name . தெட்ணாமூர்த்தி

Village :. ஆயக்காரன்புலம் Age .

Date : 18.06.2024

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 18.06.2024.
(A1, A2, A5, A6, A8, A11, A16, A7, A18 absent. u/s.317 Cr.P.C petition is filed and allowed. )

**அரசு தரப்பு முதல் விசாரணை**.

நான் ஆயக்காரன்புலத்தில் வசித்துவருகிறேன். விவசாய வேலை செய்துவருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அசா.1 ஐ தெரியும். கடந்த 28.01.2010 ம் தேதி மாலை சுமார் 7 மணியளவில் மருதூர் கந்தபவுன்ராஜ் திருமண மண்டபத்திற்கு சென்றிருந்தேன். அங்கு வெங்கடாஜலம் என்பவர் மகனுக்கு திருமணம் நடந்தது அந்த திருமணத்திற்கு ஓ.எஸ் மணியன் தலைமை ஏற்றிருந்தார். திருமணம் முடிந்து ஓ.எஸ்.மணியனுடன் எஸ்.டிரவிச்சந்திரன், மருதூர் மூர்த்தி சிவானந்தம், ஆயக்காரன்புலம் ராதா, எல்லோரும் வந்தார்கள். அவர்கள் கீழே இறங்கி போகும்போது ஒரு 10, 15 பேர் சேர்ந்த கும்பல் வாய்மேடு ஊராட்சி மன்ற தலைவர் தலைமையில் ஓ.எஸ் மணியனை சுற்றி வளைத்தார்கள். ஓ.எஸ் மணியனை பழனியப்பன் சட்டையை பிடித்து இழுத்து கழுத்தை பிடித்து நெறித்தார். பழனியப்பன் ஓ.எஸ் மணியனை கொல்ல வேண்டுமென்று அவனை இத்தோடு விடக்கூடாது என்றும் சத்தம் போட்டார். அப்போது பழனியப்பன் தனது வலது கையால் ஓ.எஸ் மணியனின் இடது கண்ணில் குத்திவிட்டார். இரண்டு பேர் சேர்ந்து அவரது வேட்டியையும் சட்டையும் பிடித்து உறுவினார்கள். வீரபாண்டியன் அன்ட்ராயரை பிடித்து உறுவினார். வாய்மேடு பாலமுருகனும் கட்ட செந்திலும் சட்டையை பிடித்து உறுவினார்கள். கத்தி, கம்பெல்லாம் வைத்திரு'ந்தார்கள். வைத்தி, கார்த்தி, தனபால், வீரமணிகண்டன், அருணகிரி, ஐயப்பன், செந்தில், ரஜினி கத்தி, கம்பி, கட்டை கம்பெல்லாம் வைத்திருந்தார்கள். மாக்கான் என்ற முருகானந்தம் கம்பியை வைத்து ஓ.எஸ் மணியனை அடித்தார். கீழே தள்ளிவிட்டு காலால் மித்தார். எஸ்.டி. இரவிசந்திரனையும், மூர்த்தியையும் கொல்லாமல் விடமாட்டோம் என்று

சொன்னார்கள். ஓ.எஸ் மணியனுக்கு காயத்தை ஏற்படுத்தினார்கள். திரும்பி போகும்போது எஸ்டி.இரவிசந்திரனின் சபாரி கார் டிஎன் 50 இ 0099 காரை அடித்து உடைத்தார்கள். இது சம்மந்தமாக போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**.

போலிசார் மறுநாள் என்னை காவல் நிலையத்தில் வைத்து காலை 11 மணியளவில் விசாரித்தார்கள். நான் வீட்டில் இருந்தபோது என்னை அழைத்து விசாரித்தார்கள். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் சம்பவத்தை நான் பார்த்துவிட்டு வீட்டிற்கு போய்விட்டேன். போலிசார் என்னை அழைத்து விசாரிக்கும்வரை சம்பவத்தை பற்றி நான் யாரிடமும் எதுவும் சொல்லவில்லை. போலிசார் என்னை எப்படி அழைத்தார்கள் என்று எனக்கு தெரியாது. வேட்டி சட்டையை உறுவியது குறித்து நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விபரம் ஓ.எஸ் மணியனுக்கு தெரியுமான என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. மாக்கான் என்ற முருகானந்தம் கம்பியை காட்டி ஓ.எஸ் மணியனை கீழே தள்ளி மித்த விபரம் அவருக்கு தெரியுமா என்றால் அவருக்கு தெரியும். எஸ்.டி. இரவிசந்திரனையும், மூர்த்தியையும் கொல்லாமல் விடமாட்டோம் என்று சொன்னார்கள் என்ற விபரம் இரவிசந்திரனுக்கும் மூர்த்திக்கும் தெரியுமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் முதல் விசாரணையில் கார்த்தி, தனபால், வீரமணிகண்டன், அருணகிரி, செந்தில், ரஜினி ஆகியோர் கம்பு வைத்திருந்தார்கள் என்ற விபரத்தை போலிசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் அதிமுக கட்சியை சேர்ந்தவர் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் 28.01.2010 அன்று திருமணத்தில் கலந்துகொள்ள மருத்தூர் கந்தபவுன்ராஜ் திருமணமண்டபத்தில் திருமண நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் பழனியப்பன் தலைமையில் எந்த ஒரு எதிரியும் அவரை தாக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. இரவிசந்திரன் மூர்த்தியை கொலை மிரட்டல் செய்யவில்லை என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் கூறியுள்ளபடி எதிரிகள் கம்பு வைத்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. டாடா சபாரி கார் உடைக்கப்பட்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஒ.எஸ் மணியனின்

தீவிர ஆதரவாளர் என்பதால் 28.10.2010 அன்று ஒரு சாட்சியாக சேர்த்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. விபரங்கள் எதுவும் நேரடியாக தெரியாததால்தான் ஓ.எஸ்.மணியன், இரவிசந்திரன், மூர்த்தி ஆகியோர் முதல் விசாரணையில் கூறாத விஷயங்களை நான் மிகைப்படுத்தி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மறுநாள் 29.1.2010 அன்று என்னை விசாரித்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**7 வது எதிரிதரப்பு குறுக்கு விசாரணையில்**

என் வீட்டில் இருந்து கந்தபவுன்ராஜ் திருமணமண்டபத்திற்கு சுமார் 5, 6 கிமீ தூரம் இருக்கும். நான் போலிஸ் விசாரணையில் வைத்தி என்ற நபர் கையில் கட்டை வைத்திருந்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வைத்தியநாாதன் என்று சொல்லியிருக்கிறேன். போலிசார் விசாரணையில் வைத்தியநாதன் கையில் கட்டை வைத்திருந்ததால் நான் எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அந்த கந்தபவுன்ராஜ் திருமண மண்டபம் இருப்பது கடை தெருவில் இருந்து 50 மீட்டர் தூரம் தள்ளி ஆகும். அது ஜன நெருக்கடியான இடம் என்றால் சரியல்ல. அந்த ரோட்டில் இரண்டு புறமும் கடைகள் இருக்கிறது என்றால் சரியல்ல. நான் அதிமுக வேதாரண்யம் ஒன்றிய இளஞரணி செயலாளராக பொறுப்பில் இருந்தேன். அந்த பொறுப்பை எனக்கு கொடுத்ததே ஒ.எஸ் மணியன் என்றால் சரியல்ல. நான் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்று நான் திருமணத்திற்கு போகவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் நான் அந்த இடத்திலேயே இல்லை என்றால் சரியல்ல. ஓ.எஸ். மணியன் மூலமாக அவருக்கு ஆதராவாக அரசியல் ஆதாயம் பெறவேண்டும் என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**S.C. 30/2019** P.W. 8

Deposition of witness for Prosecution:

Name : திரு. இராஜேந்திரன் Father's Name . கோவிந்தசாமி

Village :. ஆயக்காரன்புலம் Age . 54

Date : 18.06.2024

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 18.06.2024.
(A1, A2, A5, A6, A8, A11, A16, A7, A18 absent. u/s.317 Cr.P.C petition is filed and allowed. )

**அரசு தரப்பு முதல் விசாரணை**.

நான் ஆயக்காரன்புலத்தில் வசித்துவருகிறேன். விவசாய வேலைப்பார்த்துவருகிறேன். சம்பவம் நடந்த சமயத்தில் கந்தபவுன்ராஜ் திருமண மண்டபத்தில் கணக்கபிள்ளையாக வேலைப்பார்த்தேன். எதிரிகளை தெரியும். அசா.1 ஐ தெரியும். கடந்த 2010 ம் வருடம் ஒருநாள் தேதி மாதம் தெரியவில்லை. திருமணத்தில் மருதூரை சேர்ந்த ஒருவருக்கு திருமணம் நடந்தது. என்னை ஓனர் கல்யாண மண்டபத்தில் லைட், தண்ணீர் எல்லாம் சரியாக இருக்கிறதா என்று பார்த்துவிட்டு ஜெனரேட்டர் ரூமில் இருக்க சொன்னார் நான் அங்கு இருந்தேன். எனக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை** .

போலிசார் விசாரணையின்போது கடந்த 28.01.2010 ம் தேதி கந்தபவுன்ராஜ் திருமண மண்டபத்தில் மருதூரை சேர்ந்த வெங்கடாச்சல தேவர் என்பவின் மகன் திருமணம் ஓ.எஸ்.மணியன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது என்றும் திருமணத்தை முடித்துவைத்துவிட்டு எஸ்.டி. ரவிச்சந்திரன் மருதூர் மூர்த்தி ஆயக்காரன்புலம் ராதா ஆதனூர் சிவானந்தம் ஆகியோர்களுடன் இரவு சுமார் 07.00 மணியைப்போல ஓ.எஸ்.மணியன் மண்டபத்தை விட்டு புறப்பட்டு வாசலுக்கு வந்தபோது வாய்மேடு பஞ்சாத்து தலைவர் பழனியப்பன் தன்னுடன் பாலமுருகன், செந்தில், ஆயக்காரன்புலம் வீரபாண்டியன் தாணிக்கோட்டகம் மாக்கான் என்ற முருகானந்தம் மருதூர் தெற்கு கார்த்திகேயன், வைத்தியநாதன், சுதாகர், தகட்டூர்

குமரவேல், தனபால், தாணிக்கோட்டகம் வாய்மேடு அருணகிரி தகட்டூர் பழனிவேல், வீரமணிகண்டன், பஞ்சநதிகுளம் நடுச்சேத்தியைச் சேர்ந்த ரஜினி, செந்தில்முருகன், மற்றும் பலருடன் கும்பலாக வந்து பழனியப்பன் தன்னுடன் வந்தவர்களை இவன்களை கொன்னுடுங்கடா விட்டுடாதிங்கடா என்று சொல்லியபடி ஓ.எஸ்.மணியனின் கழுத்தை பிடித்து நெறித்தார்கள் ன்றும் சட்டை மற்றும் வேட்டியை பிடித்து இழுத்துதார்கள் என்றும் பழனியப்பன் தனது வலது கையால் ஓ.எஸ்.மணியனின் இடது கண்ணில் குத்தினார் என்றும் அப்போது பழனியப்பனுடன் இருந்தவர்கள் ஓ.எஸ்.மணியனை இழுத்து சென்றபோது மற்றவர்கள் அவர்களிடம் அவனை மானமங்கப்படுத்துங்கடா என்று சொன்னபோது பாலமுருகனும் கட்ட செந்திலும் வேட்டியை உறுவினார்கள் என்றும் வீரபாண்டியன் அன்ட்ராயரை உறுவினார்கள் என்றும் அவரை கீழே தள்ளி சவுக்கு கட்டையால் தாக்கியும் காலால் மித்தார்கள் என்றும் ரவிச்சந்திரன், மூர்த்தி, ஆகியோர்களையும் கொல்லாமல் விடக்கூடாது என்று சொல்லி கம்பியாலும் கட்டையாலும் தாக்கிவிட்டு போகும்போது ரவிசந்திரனுக்கு சொந்தமான சபாரி காரை அடித்து உடைத்து சேதப்படுத்தினார்கள் என்றும் இவர்களை அனைவரையும் எனக்கு தெரியும் என்றும் போலிசார் விசாரிக்க நடந்த விபரம் சொன்னேன் என்றும் எதிரிகளை காப்பாற்ற உண்மை சம்பவத்தை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**.

என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள அமைப்புதான் எங்கள் திருமண மண்டபம் ஆகும். அதில் உள்ள கம்பி அமைப்பு தற்போதுதான் சமீபத்தில் போடப்பட்டது. சுமார் 2, 3 வருத்திற்கு முன்பு போடப்பட்டது. அந்த புகைப்படம் குறியீடு செய்வதற்கு அரசு தரப்பில் கடுமையாக ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது. இருப்பினும் சாட்சி புகைப்படத்தில் உள்ளது திருமணம்மண்டம் என்று ஒப்புகொள்வதால் ஆட்சேபணையுடன் எமசாஆ.1 வரிசையாகும். ( 3 எண்ணிக்கை புகைப்படம்.) (குறியீடு செய்யப்படுகிறது.

**அரசு தரப்பு மறு விசாரணை**.

என்னிடம் காட்டப்படும் 2, 3 புகைப்படத்தில் திருமணத்தின் பெயர் இல்லை என்றால் சரிதான். 1வது புகைப்படத்தில் உள்ள மண்டபத்தின் பெயரை ஒட்டியோ

எடிட் செய்தோ போட்டோ எடுக்க வாய்ப்புண்டு என்றால் சரிதான். எதிரிகள் எனக்கு வேண்டப்பட்டவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE
## NAGAPATTINAM.

**S.C. 30/2019** P.W. 9

Deposition of witness for Prosecution:

Name : திரு. சாமிநாதன் Father's Name . மாரிமுத்து

Village :. பஞ்சநதிகுளம் கிழக்கில் Age .

Date : 18.06.2024

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 18.06.2024.
(A1, A2, A5, A6, A8, A11, A16, A7, A18 absent. u/s.317 Cr.P.C petition is filed and allowed. )

**அரசு தரப்பு முதல் விசாரணை**.

நான் பஞ்சநதிகுளம் கிழக்கில் வசித்துவருகிறேன். கந்தபவுன்ராஜ் கல்யாண மண்டபத்திற்கு பக்கத்தில் டீ கடை வைத்து தொழில் செய்துவருகிறேன். அசா.1 ஐ தெரியும். எதிரிகளை தெரியாது. திருமணத்திற்கு பக்கத்தில் கடையில் நான் வியாபாரம் பார்த்து கொண்டிருந்தேன். 7 மணிக்கு முன்னாலேயே நான் போய்விடுவேன். அதேப்போல் அன்றும் போய்விட்டேன். அதன் பிறகு ஓ.எஸ்.மணியனை அடித்துவிட்டார்கள் என்று எல்லோரும் பேசிக்கொண்டார்கள். எனக்கு அதுப்பற்றி தெரியாது. மறுநாள் போலிசார் வந்து என்னை விசாரித்தார்கள். நான் சம்பவம் எனக்கு நேரடியாக தெரியாது என்று சொல்லிவிட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். போலிசார் விசாரித்தபோதுதான் அந்த கையெழுத்தை அந்த இடத்தில் வைத்துப்போட்டேன். போலிசார் வேறு எதுவும் செய்தார்களா என்று எனக்கு தெரியாது. அந்த கையெழுத்து மட்டும் அதசாஆ.2 ஆகும்.

அரசு தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை** .

போலிசார் விசாரணையின்போது கடந்த 28.01.2010 ம் தேதி கந்தபவுன்ராஜ் திருமண மண்டபத்தில் மருதூரை சேர்ந்த வெங்கடாச்சல தேவர் என்பவின் மகன் திருமணம் ஓ.எஸ்.மணியன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது என்றும் திருமணத்தை முடித்துவைத்துவிட்டு எஸ்.டி. ரவிச்சந்திரன் மருதூர் மூர்த்தி ஆயக்காரன்புலம் ராதா ஆதனூர் சிவானந்தம் ஆகியோர்களுடன் இரவு சுமார் 07.00

மணியைப்போல ஓ.எஸ்.மணியன் மண்டபத்தை விட்டு புறப்பட்டு வாசலுக்கு வந்தபோது வாய்மேடு பஞ்சாத்து தலைவர் பழனியப்பன் தன்னுடன் பாலமுருகன், செந்தில், ஆயக்காரன்புலம் வீரபாண்டியன் தாணிக்கோட்டகம் மாக்கான் என்ற முருகானந்தம் மருதூர் தெற்கு கார்த்திகேயன், வைத்தியநாதன், சுதாகர், தகட்டூர் குமரவேல், தனபால், தாணிக்கோட்டகம் வாய்மேடு அருணகிரி தகட்டூர் பழனிவேல், வீரமணிகண்டன், பஞ்சநதிகுளம் நடுச்சேத்தியைச் சேர்ந்த ரஜினி, செந்தில்முருகன், மற்றும் பலருடன் கும்பலாக வந்து பழனியப்பன் தன்னுடன் வந்தவர்களை இவன்களை கொன்னுடுங்கடா விட்டுடாதிங்கடா என்று சொல்லியபடி ஓ.எஸ்.மணியனின் கழுத்தை பிடித்து நெறித்தார்கள் ன்றும் சட்டை மற்றும் வேட்டியை பிடித்து இழுத்துதார்கள் என்றும் பழனியப்பன் தனது வலது கையால் ஓ.எஸ்.மணியனின் இடது கண்ணில் குத்தினார் என்றும் அப்போது பழனியப்பனுடன் இருந்தவர்கள் ஓ.எஸ்.மணியனை இழுத்து சென்றபோது மற்றவர்கள் அவர்களிடம் அவனை மானமங்கப்படுத்துங்கடா என்று சொன்னபோது பாலமுருகனும் கட்ட செந்திலும் வேட்டியை உறுவினார்கள் என்றும் வீரபாண்டியன் அன்ட்ராயரை உறுவினார்கள் என்றும் அவரை கீழே தள்ளி சவுக்கு கட்டையால் தாக்கியும் காலால் மித்தார்கள் என்றும் ரவிச்சந்திரன், மூர்த்தி, ஆகியோர்களையும் கொல்லாமல் விடக்கூடாது என்று சொல்லி கம்பியாலும் கட்டையாலும் தாக்கிவிட்டு போகும்போது ரவிசந்திரனுக்கு சொந்தமான சபாரி காரை அடித்து உடைத்து சேதப்படுத்தினார்கள் என்றும் இவர்களை அனைவரையும் எனக்கு தெரியும் என்றும் போலிசார் விசாரிக்க நடந்த விபரம் சொன்னேன் என்றும் எதிரிகளை காப்பாற்ற உண்மை சம்பவத்தை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

என்னிடம் காட்டப்படும் எமசாஆ.1 புகைப்படம் புகைப்படத்தில் உள்ளபடிதான் இருக்குமா என்றால் எனக்கு தெரியாது. எனக்கு எந்த விபரமும் தெரியாமல் போலிசார் கேட்டுக்கொண்டதால் ஆவணத்தில் கையெழுத்து செய்துவிட்டு ஓ.எஸ்.மணியனை அடித்துவிட்டதாக தெரிந்து கொண்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**S.C. 30/2019** P.W. 10

Deposition of witness for Prosecution:

Name : திரு. வெற்றிவேல் Father's Name . முருகையன்

Village :. மருதூர் வடக்கு Age .

Date : 18.06.2024

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 18.06.2024.
(A1, A2, A5, A6, A8, A11, A16, A7, A18 absent. u/s.317 Cr.P.C petition is filed and allowed. )

**அரசு தரப்பு முதல் விசாரணை**.

நான் மருதூர் வடக்கில் வசித்துவருகிறேன். லாரி டிரான்ஸ்போர்ட் வைத்து தொழில் செய்துவருகிறேன். அசா.1 ஐ தெரியும். எதிரிகளை தெரியும். கடந்த 2010 ம் வருடம் 1 வதுமாதம் 20 ம் தேதி எங்கள் ஊர் பையனுக்கு கந்தபவுன்ராஜ் திருமண மண்டபத்தில் திருமணம் நடந்தது. அன்று ஓ.எஸ்.மணியனை அடித்து பிரச்சனையாகிவிட்டது என்று சொன்னார்கள். நான் ஊரில் இல்லை. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்தை நான் எங்கு வைத்துப்போட்டேன் என்று ஞாபகம் இல்லை. அந்த கையெழுத்து மட்டும் அதசாஆ.3 ஆகும். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை** .

போலிசார் விசாரணையின்போது கடந்த 28.01.2010 ம் தேதி கந்தபவுன்ராஜ் திருமண மண்டபத்தில் மருதூரை சேர்ந்த வெங்கடாச்சல தேவர் என்பவின் மகன் திருமணம் ஓ.எஸ்.மணியன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது என்றும் திருமணத்தை முடித்துவைத்துவிட்டு எஸ்.டி. ரவிச்சந்திரன் மருதூர் மூர்த்தி ஆயக்காரன்புலம் ராதா ஆதனூர் சிவானந்தம் ஆகியோர்களுடன் இரவு சுமார் 07.00 மணியைப்போல ஓ.எஸ்.மணியன் மண்டபத்தை விட்டு புறப்பட்டு வாசலுக்கு வந்தபோது வாய்மேடு பஞ்சாத்து தலைவர் பழனியப்பன் தன்னுடன் பாலமுருகன், செந்தில், ஆயக்காரன்புலம் வீரபாண்டியன் தாணிக்கோட்டகம் மாக்கான் என்ற முருகானந்தம் மருதூர் தெற்கு கார்த்திகேயன், வைத்தியநாதன், சுதாகர், தகட்டூர்

குமரவேல், தனபால், தாணிக்கோட்டகம் வாய்மேடு அருணகிரி தகட்டூர் பழனிவேல், வீரமணிகண்டன், பஞ்சநதிகுளம் நடுச்சேத்தியைச் சேர்ந்த ரஜினி, செந்தில்முருகன், மற்றும் பலருடன் கும்பலாக வந்து பழனியப்பன் தன்னுடன் வந்தவர்களை இவன்களை கொன்னுடுங்கடா விட்டுடாதிங்கடா என்று சொல்லியபடி ஓ.எஸ்.மணியனின் கழுத்தை பிடித்து நெறித்தார்கள் ன்றும் சட்டை மற்றும் வேட்டியை பிடித்து இழுத்துதார்கள் என்றும் பழனியப்பன் தனது வலது கையால் ஓ.எஸ்.மணியனின் இடது கண்ணில் குத்தினார் என்றும் அப்போது பழனியப்பனுடன் இருந்தவர்கள் ஓ.எஸ்.மணியனை இழுத்து சென்றபோது மற்றவர்கள் அவர்களிடம் அவனை மானமங்கப்படுத்துங்கடா என்று சொன்னபோது பாலமுருகனும் கட்ட செந்திலும் வேட்டியை உறுவினார்கள் என்றும் வீரபாண்டியன் அன்ட்ராயரை உறுவினார்கள் என்றும் அவரை கீழே தள்ளி சவுக்கு கட்டையால் தாக்கியும் காலால் மித்தார்கள் என்றும் ரவிச்சந்திரன், மூர்த்தி, ஆகியோர்களையும் கொல்லாமல் விடக்கூடாது என்று சொல்லி கம்பியாலும் கட்டையாலும் தாக்கிவிட்டு போகும்போது ரவிசந்திரனுக்கு சொந்தமான சபாரி காரை அடித்து உடைத்து சேதப்படுத்தினார்கள் என்றும் இவர்களை அனைவரையும் எனக்கு தெரியும் என்றும் போலிசார் விசாரிக்க நடந்த விபரம் சொன்னேன் என்றும் என் முன்னிலையிலும் சாமிநாதன் முன்னிலையிலும் பார்வை மகசர் தயார் செய்து அதில் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம் என்றும் கூறிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற உண்மை சம்பவத்தை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை**.

எனக்கு எந்த விபரமும் நேரடியாக தெரியாமல் ஓ.எஸ்.மணியனை அடித்து பிரச்னை ஏற்பட்டதாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**